/மின்னஞ்சலில்/

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை – 600 006.

ந. க. எண். 30000/ அ4 / இ1 / 2024, நாள்.18.06.2024.

*****

**பொருள் :** தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக் கல்வித்துறை – அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராகப் பணிமாறுதல் மூலம் நியமனம் குறித்து அறிவுரை வழங்குதல் – சார்ந்து.

**பார்வை :**
1. அரசாணை (நிலை) எண். 33, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள். 06.04.2018.
2. அரசாணை (நிலை) எண். 151, பள்ளிக் கல்வித் (வரவு செலவு–1) துறை, நாள். 09.09.2022
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.77233/அ4/இ1/2018, நாள். 06.12.2018.

*****

பள்ளிக் கல்வித்துறையின் கீழ் உள்ள அனைத்து அலுவலகங்கள், அரசு மேல்நிலை / உயர்நிலைப் பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டும் பதவி உயர்வு, பணி ஓய்வு, பணிதுறப்பு மற்றும் இறப்பு போன்ற காரணங்களால் ஏற்படும் காலிப் பணியிடங்களை மட்டுமே கணக்கில் கொண்டு மாநில அளவில் இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கான காலிப்பணியிட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு காலிப் பணியிடங்களுக்கான எண்ணிக்கையில் 55% காலிப் பணியிடங்களைத் தேர்வாணையம் மூலமாகவும், 25% காலிப் பணியிடங்களைக் கருணை அடிப்படை மூலமாகவும், 20% காலிப் பணியிடங்களைப் பதவி உயர்வு மூலமாகவும் நிரப்புவதற்குப் பணியாளர் குழுவின் ஒப்புதலின் அடிப்படையில் அரசின் அனுமதி பெறப்பட்டு, அதனடிப்படையில் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டு வருகிறது.

தற்போது அரசாணை (நிலை) எண். 151, பள்ளிக் கல்வித் (வரவு செலவு–1) துறை, நாள். 09.09.2022 பின்சேர்க்கை–II 3(i)ல் சுருக்கெழுத்து தட்டச்சர், தட்டச்சர் மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடத்தின் நியமன அலுவலராக முதன்மைக் கல்வி அலுவலருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வரசாணையில் பின்சேர்க்கை–II 3(xii)ல் முதன்மைக் கல்வி அலுவலருக்கு நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்தில் இளநிலை உதவியாளர் 20% காலிப் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்க முன்னுரிமைப் பட்டியல் தயார் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

Padasalai.Net

தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்கள் விதிகளில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விதி 13Aன்படி, பதவி உயர்வு வழங்கப்பட வேண்டிய முன்னுரிமைப் பட்டியல் ஒவ்வொரு வருடமும் 15.03. அன்று உள்ளபடி தயார் செய்ய வேண்டும்.

விதி 3 e (ii)ன்படி, 20% பணியிடம் பதவி உயர்வு / பணிமாறுதல் மூலம் நியமனம் செய்யப்பட வேண்டும். அதாவது, ஒவ்வொரு காலி 5வது இளநிலை உதவியாளர் பணியிடம் பதவி உயர்வு / பணிமாறுதல் மூலம் நிரப்பப்படல் வேண்டும்.

அரசாணை (நிலை) எண். 151, பள்ளிக் கல்வித் (வரவு செலவு-1) துறை, நாள். 10.09.2022 முதன்மைக் கல்வி அலுவலர் நியமன அலுவலர் என்பதால், தங்கள் ஆளுகைக்குட்பட்ட ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் தனித்தனியாக முன்னுரிமைப் பட்டியல் தயார் செய்து இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வினை முதன்மைக் கல்வி அலுவலர் கல்வி மாவட்டம் வாரியாகத் தனித்தனியாக வழங்க வேண்டும். வருவாய் மாவட்ட அளவில் மொத்தமாகக் கணக்கிடல் கூடாது எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அமைச்சுப் பணி விதி 3(ஜி) ன்படி கீழ்நிலைப் பணியிலிருந்து அலுவலக உதவியாளர், பதிவறை எழுத்தர், இரவுக் காவலர் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் குறுமப் பொதுக் கல்வித் தகுதி பெற்றிருந்து ஏழு அண்டுகள் பணியாற்றி நிறைவு பெற்றியிருப்பின் அப்பணியாளர்கள் முதுநிலை வரிசைப்படி உயர் பதவிகளில் பணியமர்த்த நியமனஅலுவலருக்கு அதிகாரம் உள்ளது.

அங்ஙனம் பதவி உர்வுகள் வழங்கப்படும்போது காலியாக நேரும் இளநிலை உதவியாளர் பணியிடங்களில் 20% காலியிடங்களை அந்தந்த நியமன அதிகாரியின் வரம்பில் கணக்கிட்டு சம்பந்தப்பட்ட நியமன அலுவலரால் விதிகளுக்குட்பட்டு முன்னுரிமைப்படி பதவி உயர்வு (by promotion) வழங்கப்பட வேண்டும்.

அங்ஙனம் 5வது பணியிடத்தினை கணக்கிடும் போது மாறுதலினால் ஏற்படும் காலிப் பணியிடங்களை கண்டிப்பாக எடுத்துக்கொள்ளக்கூடாது. பதவி உயர்வு, பணி ஓய்வு, விருப்ப ஓய்வு மற்றும் மரணம் போன்றவற்றினால் ஏற்படும் காலிப் பணியிடங்களை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அத்தகு 5 வது பணியிடமாக இருக்கும் நேர்வில் மட்டுமே பணி மாற்றம் மூலம் பதவி உயர்வில் நிரப்ப வேண்டும்.

Padasalai.Net

பதவி உயர்வு மூலமாக 20% நிரப்பப்பட வேண்டும் என்பதற்கு 5வது இளநிலை உதவியாளர் காலிப் பணியிட மதிப்பீட்டிற்குக் கல்வி மாவட்ட அளவில் காலிப் பணியிடப் பதிவேடு பராமரிக்கப்படுவதை முதன்மைக் கல்வி அலுவலர் உறுதி செய்து, முன்னுரிமைப் பட்டியலின்படி பதவி உயர்வு வழங்கும் போது 5வது காலிப் பணியிடத்தைச் சிகப்பு மையில் சுழித்து, அதற்கு எதிரே யாருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டது என்பதையும் பதிவு செய்து முதன்மைக் கல்வி அலுவலரால் ஒப்பமிடப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இப்பதிவேடு இனிவரும் காலங்களில் இவ்வியக்ககத்தால் ஆய்வு செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே, அவ்வப்போது அலுவலக உதவியாளர், பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வு வழங்கக் கல்வி மாவட்டம்வாரியாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15 அன்றைய நிலவரப்படி முன்னுரிமைப் பட்டியல் தயார் செய்து, அம்முன்னுரிமைப் பட்டியலின்படி தகுதிவாய்ந்த நபருக்குப் பதவி உயர்வு மூலம் இளநிலை உதவியாளராக நியமன அலுவலர் முதன்மைக் கல்வி அலுவலர் என்ற முறையில் முதன்மைக் கல்வி அலுவலர் விதிகளுக்குட்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், பதவிஉயர்வு பட்டியல் தயார் செய்து நடவடிக்கை மேற்கொள்ளும் போது நடப்பில் உள்ள சட்டம்/விதிமுறைகளை தவறாது பின்பற்றுமாறும், எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காவண்ணம் செயல்படுமாறும் முதன்மைக்கல்வி அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

18/06/24

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

18/6/24

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

படி : அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள். (இடைநிலை)

Padasalai.Net